முதல்வர் அவர்களின் ஆணைப்படி திருச்சி சிறுகனூரில் வருகின்ற 9ஆம் தேதி 10 லட்சத்துக்கு மேற்பட்டோர் பங்கேற்க இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பனிரெண்டாவது பிரம்மாண்டமான மாநில மாநாடு நடைபெறும் இடத்தை கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு நேரில் பார்வையிட்டு பணிகளை விரைந்து முடிக்க ஆலோசனை வழங்கினார். உடன் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, வடக்கு மாவட்டச் செயலாளர் காடுவெட்டி தியாகராஜன், மாநகராட்சி மேயர் அன்பழகன், வழக்கறிஞர் பாஸ்கர், ராஜசேகர் அம்பிகாவதி, கிராப்பட்டி செல்வம், சரவணன் மற்றும் பொருளாளர் துரைராஜ், குடமுருட்டி சேகர், சீனிவாச பெருமாள், கமால் முஸ்தபா உட்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

தமிழ்நாடு மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைதாவதைத் தடுக்க

நிலையான -உறுதியான தூதரக முயற்சிகளை மேற்கொள்வீர்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் – ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்குக் கடிதம்!

சென்னை, பிப். 25 -

இலங்கைக் கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட தமிழ்நாடு மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிப்ப தற்கும், தமிழ்நாடு மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்திட உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 12 மீனவர்கள் 22.02.2026 அன்று இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு மீனவர்கள் தொடர்ந்து இவ்வாறு கைது செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்தவும், இலங்கைக் காவலில் உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடு விப்பதற்கு உரிய தூதரக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவும் வலியுறுத்தி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று முன்தினம் (23.02.2026) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், இராமநாதபுரம் மாவட்டம், பாம்பன் மீன்பிடி இறங்குதளத்திலிருந்து, இயந்திரப் படகில் மீன் பிடிக்கச் சென்ற இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 12 தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் 22.2.2026 இரவு கைது செய்யப்பட்டுள்ளதை தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் மற்றும் அவர்களது மீன்பிடிப் படகுகள் இலங்கை அதிகாரிகளால் தொடர்ந்து இதுபோன்று சிறை பிடிக்கப்படுவதும், மீனவர்கள் தொடர்ச்சியாக தடுப்புக் காவலில் வைக்கப்படுவதும் மிகுந்த கவலை அளிப்பதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், தற்போதைய நிலவரப்படி, தமிழ்நாட்டைச் சேர்ந்த 259 மீன்பிடிப் படகுகளும், தற்போதைய சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்கள் உட்பட 116 மீனவர்களும் இலங்கை காவலில் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தொடர்ச்சியான கைது நடவடிக்கைகள், கடலோர சமூகத்தினரிடையே வாழ்வாதாரம் மற்றும் பாதுகாப்பு குறித்து ஆழ்ந்த பதட்டத்தையும், நிச்சயமற்ற தன்மையையும் ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், நமது மீனவர்கள் இதுபோன்று கைது செய்யப்படுவதைத் தடுக்க நிலையான மற்றும் உறுதியான தூதரக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்று தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு மீனவர்கள் மீண்டும் கைது செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்திடவும், இலங்கைக் காவலில் உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடு விப்பதற்கு உரிய தூதரக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

முதலமைச்சரின் நான் முதல்வன் - புதுமைப் பெண் -

தமிழ்ப்புதல்வன் திட்டங்களால் மாணவர்கள் சேர்க்கை அதிகரிப்பு!

அமைச்சர் – முனைவர் கோவி. செழியன், அன்புமணி ராமதாஸ் கருத்துக்கு பதிலடி!

சென்னை, பிப்.25 –

முதலமைச்சர் அவர்களின் நான் முதல்வன், புதுமைப் பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன் போன்ற முத்தான திட்டங்களால் 2025-2026 கல்வியாண்டில் மாணாக்கர்கள் சேர்க்கை எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்றும், டாக்டர் அன்புமணி ராமதாஸ் ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவையாக செயல்படாமல் உண்மையை அறிந்து பேச வேண்டும் என்றும். உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ள கருத்துகளுக்கு பதிலடி கொடுத்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் முனைவர் கோவி. செழியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தன்னிகரில்லாத் தலைவர் திராவிட நாயகன் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இவ்வரசு பொறுப்பேற்ற நாள் முதல் கிராமப்புற மாணாக்கர்களின் உயர்கல்வித் தேவையை முழுமையாக பூர்த்தி செய்யும் நோக்கில் 2021-2026ஆம் ஆண்டு வரை 38 அரசு கலை, அறிவியல் கல்லூரிகளும், 4 வேளாண்மை கல்லூரிகளும், 1 பாலிடெக்னிக் கல்லூரி, 1 சட்டக் கல்லூரி மற்றும் 41 தொழில்பயிற்சி கல்லூரிகள் என மொத்தம் 85 புதிய கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதனால், 28,351 மாணாக்கர்கள் கூடுதலாக பயனடைந்து வருகின்றனர். மேலும், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மட்டும் 252 புதிய பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்டதனால், 13,346 மாணாக்கர்கள் கூடுதலாக பயனடைந்து வருகின்றனர்.

2016-2021ஆம் ஆண்டில் அரசு கலை மற்றும் அறிவியல், பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் 5,93,848 என்று இருந்த மாணாக்கர்களின் சேர்க்கை தற்போது 7,52,150 என அதிகரித்துள்ளது. குறிப்பாக, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் மாணாக்கர் சேர்க்கை 20192020ஆம் கல்வியாண்டில் 83,432-ஆக இருந்தது, 2025-2026-ஆம் கல்வியாண்டில் 1,03,227 ஆக உயர்ந்துள்ளது.

உதவிப் பேராசிரியர்கள் நியமனம்!

2015-ஆம் ஆண்டிற்குப் பிறகு அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருந்த நிலையில், இவ்வரசு பொறுப்பேற்றவுடன் 4,000 உதவிப் பேராசிரியர் பணிநியமனத்திற்கான பணிகள் தொடங்கப்பட்டன. பல்வேறு நீதிமன்ற வழக்குகளுக்கிடையே 06.10.2025 அன்று 2,708 உதவிப் பேராசிரியர்கள் பணி நியமனம் செய்ய ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதனைத்தொடர்ந்து 27.11.2025 அன்று முதன்மைத் தேர்வு, ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்பட்டுள்ளது. இதற்கான முடிவுகள் விரைவில் வெளியிடப்பட்டு, அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் பணி நியமனம் செய்யப்படும். மேலும், அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் காலியாக இருந்த 1,060 விரிவுரையாளர் பணியிடங்களை ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 2022-2023ஆம் ஆண்டில் 1,033 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

இதனிடையே, மாணாக்கர்களின் கல்விநலன் பாதிக்கப்படாமலிருக்க, அனைத்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும், 2022-23இல் 1,895 கௌரவ விரிவுரையாளர்களும், 2025-2026ஆம் கல்வியாண்டில் இதுவரை 1,703 கௌரவ விரிவுரையாளர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர். தற்போது, மேலும் 426 கௌரவ விரிவுரை யாளர்கள் நிரப்பப ட உள்ளனர். எனவே, மாணாக்கர்களின் கல்விச் சேவை எவ்வகையிலும் பாதிக்கப்படவும் இல்லை. மாணாக்கர் சேர்க்கையும் எந்தவகையிலும் குறையவில்லை.

அன்புமணி அவர்கள், தற்போது சேர்ந்துள்ள கூட்டணியின், தனது டெல்லி எஜமானர்களை திருப்தி ப்படுத்தவே இவ்வாறான பொய்க் குற்றச்சாட்டுகளை கழக அரசின் மீது சுமத்துகிறார். தமிழ்நாட்டு கல்வி நலனில், மாணவர் நலனில் உண்மையான அக்கறை இருந்தால், தான் சேர்ந்து இருக்கும் கூட்டணி யிலுள்ள பா.ஜ.க.விடமிருந்து தமிழ்நாட்டின் கல்வித் துறைக்குத் தர வேண்டிய நிதியைக் கேட்டு பெறட்டும். பின்பு அவர் கல்வித்துறை மீது கவலை கொள்ளலாம். அதுவரை நீலிக் கண்ணீர் வடிப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

பெரியார் வழிவந்த, பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கையைப் பின்பற்றி, முத்தமிழறிஞர் அவர்களின் வழித்தோன்றலான நம் தலைவர் அவர்கள் தமிழ்நாட்டின் மும்மொழிக் கொள்கையை நுழைய விடாமல் தடுத்து நிறுத்தியதால் கல்வித் துறைக்கு வழங்கவேண்டிய நிதியை திரு.அன்புமணி அவர்கள் உறவு வைத்திருக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசு ஓரவஞ்சனையுடன் நிறுத்தி வைத்துள்ளது. மாணவர்களுக்காக குரல் கொடுக்கும் அன்புமணி அவர்கள் அந்த நிதியை வழங்க பா.ஜ.க. அரசுக்கு அழுத்தம் தந்தாரா...? அல்லது அழுத்தம் தந்தால் தன்னை கூட்டணியிலிருந்து விலக்கிவிடுவார்கள் என்ற பயத்தில் இம்மாதிரியான பொய்யான தகவல்களைத் தருகிறார். ஒருவேளை தமிழ் நாட்டில் மும்மொழிக் கொள்கையை இவர் ஆதரிக்கிறாரா?

ஒன்றிய பா.ஜ.க. அரசு கல்வித் துறையில் பல்வேறு இடர்ப்பாடுகளை ஏற்படுத்தி வந்தாலும், நிதி ஓரவஞ்சனை செய்தாலும் பல தடைகளைத் தாண்டி மாணவர் நலன் காக்கும் திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றவுடன் கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமது பிறந்தநாளில் (01.03.2022) நான் முதல்வன் என்ற முத்தான திட்டத்தினை அறிவித்தார்கள். இத்திட்டத்தின் அடிப்படை நோக்கம்; மாணவர்கள் அவரவர் துறையில் முதன்மை வாய்ந்தவர்களாக முதல்வராகத் திகழ வேண்டும் என்பதே..! அதற்காக மாணவர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அவர்களின் தேவை அறிந்து தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு ஏற்ப, நவீன தொழில்நுட்பப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 48.65 லட்சம் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் ஒரு பகுதியான, நான் முதல்வன் – குடிமைப் பணி பயிற்சி மற்றும் நிதி உதவி வழங்கும் திட்டத்தினால், சமீப ஆண்டுகளில் மத்திய அரசு நடத்தும் UPSC தேர்வில் தமிழ்நாட்டு மாணவர்கள், அதிக அளவில் வெற்றியும் கண்டு வருகின்றனர் என்பதே எங்கள் தளபதி அவர்களின் ஆட்சிக்குக் கிடைத்திருக்கும் சாட்சியாகும். இதை அன்புமணி மறுக்கிறாரா?

புதுமைப் பெண் - தமிழ்ப் புதல்வன் திட்டங்கள்!

மேலும், கிராமப்புற ஏழை எளிய மாணவர்களின் உயர்கல்விக் கனவு, பொருளாதாரத்தை ஒரு காரணமாகக் காட்டி நிறைவேறாமல் போய்விடுமோ என்ற அச்சத்தைத் தவிர்த்து உயர்கல்வியில் சேர்க்கை பெறும் அரசுப்பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு மாதம் ரூ1,000 வழங்கும் உன்னதத் திட்டங்களான "தமிழ்ப்புதல்வன் "புதுமைப்பெண் போன்ற திட்டங்களை வழங்கியவர் நமது முதலமைச்சர் அவர்கள். இத்திட்டங்களினால் 12 இலட்சம் மாணாக்கர்கள் பயன்பெற்று வருகின்றனர். தற்போது உலக நாடுகளில். நமது தமிழ் நாட்டு மாணவர்கள் திறம்படப் போட்டியிட்டு உச்சம் தொட "உலகம் உங்கள் கையில் என்ற உன்னதத் திட்டத்தின் வாயிலாக பத்து லட்சம் மடிக்கணினிகள் இந்தக் கல்வியாண்டிலேயே வழங்கிடவும், அடுத்த கல்வியாண்டில் மேலும் 10 லட்சம் மடிக்கணினிகள் வழங்கிடவும் ஆணையிட்டார்கள். அதன்படி தற்போது வரை 8.32 இலட்சத்திற்கும் மேலான மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. அதேபோல், உயர் கல்வி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த பெருந் தலைவர் காமராசர் திட்டத்தின் கீழ் ரூ.1,000 கோடி அறிவித்து, தற்போது வரை ரூ.909 கோடி செலவில் கூடுதல் கட்டடங்கள், வகுப்பறைகள், ஆய்வகங்கள் மற்றும் கலைக்கூடங்களின் வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

அண்ணா பல்கலைக்கழகத்தை அடுத்த 5 ஆண்டுகளில் நாட்டின் முதன்மை கல்வி நிறுவனமாகவும், QS உலகத் தரவரிசையில் முதல் 150 இடங்களில் ஒன்றாக உயர்த்திடும் நோக்கில் ரூபாய் 1,380 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. அரசு உயர் கல்வி நிறுவனங்களின் ஆய்வகங்கள் அனைத்தையும் ரூ.61.16 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாணாக்கர்களின் உயர் கல்விச் சேர்க்கை மற்றும் சேவை எல்லா வகையிலும் தற்போது மேம்பட்டு வருகிறது. சிறப்பு பயிற்சிகள் மூலமாக அரசு அவர்களை கூடுதலாக திறன் பெற்ற மாணாக்கர்களாக உருவாக்கி வருகிறது. இது, எங்களது தளபதியின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் சாதனை என்பதே உண்மை நிலை. அன்புமணி அவர்கள் இனிமேலாவது ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைபாவையாகச் செயல்படாமல் அவர்கள் உண்மை நிலை அறிந்து பேச வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் முனைவர் கோவி. செழியன் அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மக்களின் மாபெரும் எழுச்சிமிகு ஆதரவோடு

150 தொகுதிகளைக் கடந்த 'தமிழ்நாடு தலைகுனியாது' பரப்புரை!

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் வரலாற்று வெற்றியை உறுதி செய்யும் வகையில் தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரையானது பிப்ரவரி 1 ஆம் தேதி முதல் தமிழ்நாடு முழுக்க வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. திராவிடமாடல் அரசின் சரித்திர சாதனைகள் மற்றும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் வஞ்சகம் அதன் அடிமை கூட்டணியின் துரோகத்தை மக்கள் முன் எடுத்துரைக்கும் இப்பரப்புரைக் கூட்டத்தில் மக்கள் எழுச்சியோடு வந்து கலந்து கொண்டு ஆதரவு அளித்து வருகின்றனர். மக்களின் ஆதரவோடு 151 தொகுகளில் தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரையானது வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளது.

22.02.2026 அன்று எட்டு தொகுதிகளில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் குளச்சலில் இனிகோ இருதயராஜ், அணைக்கட்டில் ஆர்.எஸ் பாரதி , தூத்துக்குடியில் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், திருவிடைமருதூரில் சபாபதி மோகன், மாதவரத்தில் கனிமொழி சோமு, கள்ளக்குறிச்சியில் எழிலன் நாகநாதன் , கந்தர்வக்கோட்டையில் ஏ.கே.எஸ்.விஜயன் , முதுகுளத்தூரில் திருமதி. தமிழச்சி தங்கபாண்டியன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு அனல் பறக்க பரப்புரை செய்தனர்.

ஆர்.எஸ்.பாரதி அவர்கள் பேசும் போது " திராவிட மாடல் அரசின் மகளிர் நல திட்டங்களை பட்டியலிட்டு பேசியவர், கலைஞர் ஆட்சியின்போது பெண்கள் முன்னேற்றத்திற்காக கொண்டு வந்த திட்டங்கள் மூலம் பெண்கள் காவல்துறை உயர் அதிகாரிகளாகவும், நீதிபதி களாகவும் உயர்ந்துள்ளனர் என்று குறிப்பிட்டார். மேலும் இந்த மாதம் முதலமைச்சர் அவர்களால் 1.31 கோடி பெண்களுக்கு கொடுக்கப்பட்ட 5000 ரூபாய் உரிமை தொகையைத் தடுக்க பா.ஜ.க. செய்த சதி வேலைகளையும் விளக்கி கூறினார். இப்படி நலத்திட்டங்களை தடுத்து நிறுத்த துடிக்கும் பா.ஜ.க.வுக்கு துணை போகும் அ.தி.மு.க.விற்கு யாரும் வாக்களிக்க கூடாது என்பதை அழுத்தம் திருத்தமாக பதிவு செய்தார்.

இனிகோ இருதயாராஜ் அவர்கள் பெண்களின் அன்றாட வாழ்விற்கு கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டம் எவ்வளவு முக்கியமாக இருக்கிறது என்பதை எடுத்துரைத்ததோடு, நமது முதலமைச்சர் கொண்டு வந்த காலை உணவுத் திட்டத்தை , கனடா பிரதமர் அவர்கள் அவரது நாட்டில் அதை செயல்படுத்தி உள்ளார் என திராவிட மாடல் அரசின் சாதனைகளின் வீச்சு பற்றி பேசினார். அதோடு கல்வி நிதியை நிறுத்தி, மும்மொழி கொள்கை என்ற பெயரில் இந்தியை திணிக்கும் பா.ஜ.க.வை எதிர்க்கும் துணிச்சல் கொண்ட ஒரே தலைவர் நம் முடைய முதலமைச்சர்தான் என அழுத்தம் திருத்தமாக பேசினார்.

கள்ளக்குறிச்சியில் எழிலன் நாகநாதன் பேசுகையில் " முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த இடஒதுக்கீடு என்ற ஏணிதான், என்னைப் போன்ற சாதாரணமானவர்களையும் மருத்துவர் ஆக்கியது. இதுதான் சமூக நீதிக்குச் சான்று. ஒரு காலத்தில் குனிந்து கைகட்டி நின்றவர்கள், இன்று தலைநிமிர்ந்து சமமாக நடக்கும் நிலையை திராவிட முன்னேற்ற கழகம் உருவாக்கியுள்ளது. சாதி, மத பேதமின்றி அனைவரும் ஒரே மேடையில் அமரும் 'சமத்துவ மேடையை' இந்த இயக்கம் வழங்கியுள்ளது என குறிப்பட்டவர் கள்ளக்குறிச்சி மக்கள் இம்முறை உதய சூரியன் பக்கம் அணிதிரண்டு விட்டார்கள். அ.தி.மு.க. ஆட்சியில் அவர்கள் சொன்னதை கூட செய்யவில்லைஉ ஆனால் திராவிட மாடல் ஆட்சியில் சொன்னதை மட்டுமல்லாமல் சொல்லாத பல நலத் திட்டங்களையும் நிறைவேற்றிக் காட்டியுள்ளார் முதலமைச்சர் அவர்கள். ஆகவே 2026 இலும் மக்களுக்கான திராவிடமாடல் அரசை அரியணை ஏற்றுவோம் என சூளுரைத்தார்.

மாதவரம் தொகுதியில் திருமதி.கனிமொழி சோமு அவர்கள் " தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் 9 முறை ஒன்றிய பா.ஜ.க. அரசின் பட்ஜெட்டைத் தாக்கல் செய்தும், தமிழகத்திற்கு ஒதுக்கியது 'பூஜ்யம்' தான். நாம் கொண்டு வந்த 'தோழிகள் விடுதி' போன்ற திட்டங்களை மட்டும் நகலெடுத்துக் கொள்கிறார்கள், ஆனால் நிதி என்று வரும்போது தமிழகத்தைப் புறக்கணிக்கிறார்கள். பீகார் வெள்ளத்திற்கு நிவாரண நிதியை வாரி வழங்கிய ஒன்றிய பா.ஜ.க. அரசு, தமிழ்நாடு வெள்ளத்தால் தத்தளித்தபோது ஒரு பைசா கூட தராமல் வஞ்சித்தது, அதற்கு அ.தி.மு.க. துணைபோன மிகப்பெரிய துரோகம். ஒன்றிய அரசுத் தேர்வுகளில் வட இந்தியர்களுக்கே முன்னுரிமை அளித்து, தென்னிந்தியர்களையும் சிறுபான்மையினரையும், தமிழ் நாட்டு மக்களையும் திட்டமிட்டுப் புறக்கணிக்கிறார்கள் என ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஓரவஞ்சனையை மக்கள் முன் வெளிச்சம் போட்டு காட்டினார்.

சபாபதி மோகன் அவர்கள் " இங்கிலாந்து பிரதமர் ஸ்டார்மரே நமது முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த காலை உணவுத் திட்டத்தை வியந்து குறிப்பட்டதை எடுத்துரைத்து "Stalin is firing on all cylinders" என ஆங்கில ஊடகங்கள் முதலமைச்சரை பாராட்டியதையும் குறிப்பிட்டு பேசினார். வருகின்ற மே மாதத்திலிருந்து 1.31 கோடி குடும்பத்தலைவிகள் கணக்கிலும் 2000 வரப்போகிறது என அவர் குறிப்பிட கூட்டத்தில் திரண்டிருந்த பெண்கள் கரவொலி எழுப்பி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

இவ்வாறு தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை நடைபெறும் அனைத்து தொகுதிகளிலும் தமிழ்நாட்டு மக்கள் உற்சாகமாக கலந்து கொண்டு பேராதரவளித்து வருகின்றனர்.